முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி தை மாதம் 6ம் திகதி முதல் தை மாதம் 13ம் திகதி வரை**

**ஜனவரி 20ம் திகதி முதல் ஜனவரி 27ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தயவு சிந்தை மிகுந்தநல்
தமிழ் மக்களை கொண்ட தமிழகமே
நேயக்கரம் நீட்டி நிலவுலகில்
நீதி காக்கும் சமாதானம் படைக்கும் பரதமே

2. பரதம் தமிழகம் தன்னில்
பகருவேன் இந்த வார நிகழ்வாக
தரணியிலே விளம்பி கலை திங்கள்
தக்க சஷ்டி திகதி மேல் முன்னான்கோர் திகதி வரை
(விளம்பி வருடம் தை மாதம் 6ம் நாள் 20.01.2019, ஞாயிறு முதல் தை மாதம் 13ம் நாள் 27.01.2019, ஞாயிறு முடிய)

3. வரையான எதிர்கால பலனை
வார ஆசியாக சுப்பிரமணியர் யானும்
உரைத்திடுவேன் அரங்க ஞானி கேட்க
உயர்வான தருமசிந்தை மக்களிடை

4. மக்களிடை பரவி வருதலுற
மண்ணுலகில் இனி ஆளுமைகள்
ஆக்கமான எந்த செயல் திட்டங்கள்
அவசியம் மக்களை காக்கும் நலன்கள்

5. நலன்கள் கொண்டு சேவையை
நம்பிக்கைபட செய்யாவிட்டால்
பலனின்றி தமிழக எல்லையில்
பதவியாளர்கள் தவிக்க நேரும்

6. நேருமையிலா நலத் திட்டங்கள்
நீதி காக்கா செயல்முறைகள்
தேறுதல் காலம் மாறுதல் தரா
தென்னகத்தில் எதிர்ப்பே காணும்

7. காணவே மாநில உரிமைகளை
கட்டாயம் காக்கும் மத்தியே
ஞானம்பட ஆட்சி திடமும்
நம்பகமான அரசாக மாற நேரும்

8. நேருமையின்றி மக்களை நோக்கி
நிதிச்சுமை பற்றாக்குறையென
வறுமையாக்கும் வரிச்சுமையை
வளர்த்தால் தன் பலம் இழந்து

9. இழப்பதுடன் உலக நாடுகளில்
இந்தியாவின் நிலை பரிதாபமாகும்
இழப்பு இல்லா உலக சந்தையில்
இந்தியா தமிழகம் தலைநிமிர

10. நிமிரவே சிறு தொழில் பெருதொழிலில்
நீதிக்கு மீறி வரிச்சுமை கூட்டா
நேமமுடன் வளர்ச்சிக்கான தயவாக
நிர்வாகம் ஆளுமைகள் நடக்கவே

11. நடக்கவே மக்களிடை நன்மதிப்பு
நாணய மதிப்பு சகலதும் உயர்ந்து
இடரில்லா ஏற்றமே காணும்
இந்தவித பக்குவம் திடமான ஆளுமை பெற

12. ஆளுமைபெற அரங்கமகா ஞானியின்
அறநெறிக் கொள்கை ஏற்று வர
வலுவான நிலைக்கு இந்தியா தமிழகம்
வளரும் உயரும் ஞானபூமியாக வார ஆசி நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் தை மாதம் 6ம் நாள் 20.01.2019, ஞாயிறு முதல் தை மாதம் 13ம் நாள் 27.01.2019, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

தயவு உள்ளம் மிகுந்த நல்ல மக்களை மிகுதியாகக் கொண்டிட்ட தமிழகத்திலும் நேசக்கரம் நீட்டி மற்ற நாடுகளையும் சகோதர நாடுகளாக பாவித்து சமாதானம் படைத்து சமநீதியைக் காக்கும் பாரத தேசத்திலும் இந்த வார நிகழ்வாக விளம்பி வருடம் தை மாதம் 6ம் நாள் 20.01.2019, ஞாயிறு முதல் தை மாதம் 13ம் நாள் 27.01.2019, ஞாயிறு முடிய உள்ள நிகழ்வுகளை ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

உலகையே காக்கும் வல்லமைமிக்க தர்மசக்தி உலகினில் பெருகிடவே உலக மக்களெல்லாம் தருமசிந்தையுடன் நடந்து கொள்ள வேண்டும். தமிழகத்தில் உள்ள ஆட்சியாளர்கள் மக்களுக்காக போடப்படும் திட்டங்களெல்லாம் மக்களுக்கு பயன் உள்ளதாக ஆக்கப்பூர்வமான திட்டங்களாக தீட்ட வேண்டும். மக்கள் நலன்களையே முக்கியமாக கொண்டு செயல்பட வேண்டும். அவ்வாறு இல்லாமல் செயல்பட்டால் தமிழக ஆட்சி பொறுப்பில் உள்ளவர்கள் தவித்திட நேருமப்பா.

நேர்மையற்ற நலத்திட்டங்களும் நீதியை காக்காத செயல்முறைகளும் தேர்தல் காலத்திலே மாற்றங்களை உண்டாக்கி ஆட்சியாளர்கள் மீது எதிர்ப்பை உண்டாக்கிடும்.

மாநில அரசுகளின் உரிமைகளை பாதுகாத்து காக்கும் மத்திய ஆட்சியே அற்புதமான ஆட்சியாகும். அப்படி மாநில அரசுகளை அனுசரித்து அதன் உரிமைகளை காத்திட்டால் மத்தியில் நடக்கும் ஆட்சி திடமான நம்பிக்கை உள்ள ஆட்சியாக மக்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

நேர்மையற்ற முறையிலே மக்கள் மீது தேவையில்லாமல் நிதிச்சுமை என்ற பெயரிலும் பற்றாக்குறை என்ற பெயரிலும் வலுக்கட்டாயமாக மக்களை ஏழைகளாக ஆக்குகின்ற வரிச்சுமையை மேலும் திணித்தால் நாட்டை ஆட்சி செய்வோர் பலம் இழப்பார்கள், நாடும் பலம் இழக்கும், உலக நாடுகளில் இந்தியாவின் நிலை பரிதாபகரமான நிலைக்கு போய்விடும்.

உலக நாடுகளில் பாரத தேசம் தலைகுனியாமல் எந்தவிதமான இழப்புகளும் இல்லாமல் உலகச் சந்தையில் இந்தியா தலைநிமிர்ந்து நிற்கவும், தமிழகமும் தலைநிமிர்ந்து நிற்கவும் சிறுதொழில்களிலும் பெருதொழில்களிலும் நீதிக்கு மீறி வரியினை அதிகப்படுத்தாமல் மக்களுக்கு எந்த அளவு வரி செலுத்த முடியுமோ, அந்த அளவிற்கு சாதாரணமாக்கி மக்களுடன் சிநேகமாக நடந்து வளர்ச்சியை நாடு கண்டால், வரி கூட்டாது, நாட்டின் ஆட்சி நிர்வாகம் நடந்தால் ஆளும் அரசின் மீது மக்களுக்கு நன்மதிப்பு உண்டாகும். நாட்டின் நாணயமதிப்பும் உயரும், சகலமும் உயரும். எல்லாவகை முன்னேற்றங்களும் உண்டாகி துன்பமில்லாத நாடு உருவாகி எப்போதும் முன்னேற்றமே காணும்.

இப்படிப்பட்ட ஆட்சியை நடத்தவும் அதற்குரிய பரிபக்குவத்தை பெற்றிடவும், திடமான ஆட்சியை பெறவும் உலக மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியின் தூய அறநெறிக் கொள்கைகளை ஆட்சி பொறுப்பில் உள்ளோரும் மக்களும் ஏற்று கடைப்பிடித்திட கடைப்பிடித்திட வலுவான நிலைக்கு இந்தியாவும் தமிழகமும் வந்துவிடும், இந்தியாவும் தமிழகமும் மேன்மேலும் வளர்ச்சி அடையும் என தமது வார ஆசி நூல் மூலம் உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–